# <u>மேல்நிலைப்பள்ளி பொதுத்தேர்வு மார்ச் 2019 மையம் மதிப்பீடு முகாம் சுற்றறிக்கை</u>

1. மேல்நிலைப்பள்ளி மைய மதிப்பீடு முகாமிற்கு அனைத்து முதுகலை ஆசிரியர்களையும் விடைத்தாள் திருத்தும் மையத்திற்கு அறிவுரை வழங்கி விடுவிக்குமாறு தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
2. சார்ந்த கல்வி மாவட்டத்திற்கு அருகில் உள்ள மற்றொரு கல்வி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில், முகாமில் விடைத்தாள் திருத்தும் பணி குறித்த தேதிக்குள் நிறைவடையாத சூழ்நிலை ஏற்படும் எனில், மதிப்பீடு நிறைவு பெற்ற கல்வி மாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களும் அந்த முகாமிற்கு சென்று பணியாற்றி விடைத்தாள் மதிப்பீட்டு பணியினை குறித்த தேதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படுவீர்.
3. மேல்நிலைப்பள்ளி விடைத்திருத்தும் முகாம் விவரம்

| ஸீசி & ஸீரு | AEs | முகாம் பெயர் | பாடம் | கலந்துகொள்ள வேண்டிய முதுகலை ஆசிரியர்கள் **(அரசு/ நிதியுதவி/ஆதி திராவிட நலம்/ மெட்ரிக் பள்ளிகளில் பணிபுரியும் +1, +2 போதிக்கும் பாட ஆசிரியர்கள் மட்டும்)** |
|---|---|---|---|---|
| **29.03.2019 காலை 8 மணி** | **30.03.2019 காலை 8 மணி** | இந்து ஆண்கள் மேநிப, ஆம்பூர் | பொதுப் பாடங்கள் (Except rare subjects & rare language subjects) | திருப்பத்தூர்/ வாணியம்பாடி கல்வி மாவட்டங்களுக்கு உட்பட்ட அனைத்து முதுகலை பாட ஆசிரியர்கள் |
| **29.03.2019 காலை 8 மணி** | **30.03.2019 காலை 8 மணி** | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேநிப, வேலூர் | | வேலூர் கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட முதுகலை பாட ஆசிரியர்கள் |
| **29.03.2019 காலை 8 மணி** | **30.03.2019 காலை 8 மணி** | இஸ்லாமியா ஆண்கள் மேநிப, மேல்விஷாரம் | | அரக்கோணம் மற்றும் இராணிப்பேட்டை கல்வி மாவட்டங்களுக்கு உட்பட்ட முதுகலை பாட ஆசிரியர்கள் |

4. மருத்து விடுப்பு உள்ளிட்ட யாதொரு விடுப்பும் முதன்மைக்கல்வி அலுவலரின் அனுமதி பெற்ற பின்னரே விடுப்பு அனுமதிக்கப்படும்.
5. மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் தங்கள் பள்ளியில் பணியாற்றும் +1, +2 போதிக்கும் முதுகலை பாட ஆசிரியர்களை தவறாமல் விடைத்தாள் திருத்தும் முகாமிற்கு விடுவித்தனுப்ப வேண்டும். அவ்வாறு விடுவிக்கப்படும் ஆசிரியர்களின் விவரங்களை இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 28.03.2019 அன்று பிற்பகலுக்குள் தனி நபர் மூலம் முதன்மைக்கல்வி அலுவலகத்தில் 'ஆ5' பிரிவில் நேரில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில் நடைபெறும் +1 மற்றும் +2 மதிப்பீட்டு பணி குறித்த நேரத்தில் நிறைவேற்ற அனைத்து முதுகலை பாட ஆசிரியர்களை, தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களை ஒத்துழைப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.